உ

முருகமயம்



கந்தனின் புகழைக் கேட்டு
கந்தனின் நாமம் பாடி
கந்தனின் பாதமேத்து மனமே

# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய

# மஹேஸ்வர பூசைத் தொண்டர் சபைச் செய்திகள்

காலம்:

01-06-2006 - 30-04-2007 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

# மாவைக்கந்தன் ஆலய மஹேஸ்வர பூசைத் தொண்டர் சபை 2006 - 2007 அறிக்கை

***பக்தியன்புனிறைந்த நெஞ்சினில் துளிரும் உணர்வுகளாலும்,***

***நிறைந்த சிந்தனைகளில் மலர்ந்த எண்ணங்களாலும்,***

***உலகெலாம் சைவநீதி குறைவிலாதுவிளங்கி, உயிர்கள்***

***நன்றாகவே வாழவேண்டுமென்ற சித்தனைகளிற்கேற்ப***

***கருமங்களை முன்னெடுத்துவரும் சைவச் சான்றோர்களே,***

***நீவிரெல்லோரும் சிறந்த திருவட்செல்வங்களோடு 'இனிதே***

***வாழ முருகப்பெருமானது திருவருளும் உங்கட்கெல்லாம்***

***கிடைக்க வேண்டுமென நாமும் பிரார்த்திக்கின்றோம்.***

மாவைக் கந்தனது திருவருள் வேண்டி வழிபடவருகை தரும் பக்தர்களது தாகசாந்தி, பசியாற்றல் என்பவற்றைக் கவனிக்கும் பொருட்டு ஆறு பணிப்பாளர்கள் இணைந்த நிர்வாக சபை "மாவைக் கந்தன் மகேஸ்வர பூசைத் தொண்டர் சபை" என்ற பெயரில் நியமிக்கப்பட்டுள்ளது. திருவருட் துணைகொண்டு இவர்கள் மூலமாகப் பக்தர்களது வசதிகள் பூரணமாகவும் திருப்தியுடனும் சிவபக்தர்களது துணைகளோடும். நிறைவேற்றப்படுவது தெய்வச் செயலேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தமது சிவதர்மங்களையாற்ற மாதந்தோறும் வரும் வெள்ளிக்கிழமைகளிலும் மற்றும் விசேஷ தினங்களிலும், தினந்தோறும் வருகை தருவோருக்கும் இச்சபையினர் தாகசாந்தி, அன்னதானம் ஆதியனவற்றைத் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றனர். இது அவசியமுமாயிற்று. சில தர்மவான்கள் தாமாகவே வேண்டிய பொருட்களைத் தந்துதவி, கூடனின்று அன்னதான நிகழ்வுகளை நடாத்தியுள்ளனர். சிலர் நிதியுதவி தந்தும் ஆதரித்தனர். சிலர் தமது மூதாதையர், தம்மைவிட்டுப் பிரிந்தோர் ஞாபகமாகவும் மகேஸ்வர பூசையை வளர்க்கின்றனர். தர்மவான்களது ஆதரவுகள் தொடர்ந்தும் நிகழ்கின்றன. பூசை ஆராதனைகளோடு மகேஸ்வர பூஜையும் அவசியமாகிறது. இதுவரை இத்தர்ம கைங்கர்யங்கட்கு ஆதரவு தந்து ஆற்றுப்படுத்திய அனைவருக்கும் மாவைக் கந்தசுவாமியாரது திருவருள் அபரிமிதமாக வர்ஷிக்க வேண்டுமெனத் தினமும் பிரார்த்திக்கின்றேன். ஆதரித்தோருக்கு சூரிய பகவானது அருளும் சேர்வதாகும். தொடர்ந்து இம் மகேஸ்வர பூஜா தர்மம் தொடரவும் உதவுக. சிவபுண்ணியம் வளர்வதாகுக.

சுபம்

**மஹாராஜஸ்ரீ கு. து. ஷண்முகநாதக் குருக்கள்**

மவையாதீனகர்த்தா - பிரதமகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

# மஹேஸ்வரபூசைத் தொண்டர் சபை.

## நினைவில் பதியவேண்டிய தகவல்கள் 2006 – 2007

பழந்தமிழ்ப் புலவர்கள் நம்பொருட்டுச் சேர்த்துவைத்த செல்வங்கள் தமிழ்க் காப்பியங்களே. அவற்றைப் போற்றிப் பேணி, நயங்கண்டு சுவைத்தல் நம் கடமையாகும். சுவைப்பதற்கு அவற்றில் கூறப்பட்டுள்ள கதையம்சங்களை உணர்ந்திருத்தல் அவசியமாகும். இதேபோன்றுதான், சிவத்தமிழர்களது வாழ்க்கையின் முறை, வாழ்தலுக்கு வேண்டப்படும் அறம், அறங்களால் சேகரிக்கப்படும் தர்மகைங்கர்யம், தர்மகைங்கர்யங்களால் உந்தப்படும் மனிதநேயம், மனிதநேயங்களால் தோற்றம் பெறும் சகவாழ்வு, சகவாழ்வின்மூலம் பெறும் தெய்வீகச் சூழல், தெய்வீகச் சூழல்மூலம் சேரும் தெய்வத் தன்மை, இத்தெய்வத் தன்மையரல்தான் உலகம் உய்யும் எனச் சித்தர்களும், இதிகாசபுராணகால ரிஷிவர்க்கத்தினரும் உலகிற்கு உணர்த்தியுள்ளனர். எப்படி வாழவேண்டுமெனக் கூறியவர்கள், உணவு மூலம்தான் மேற்கூறிய தன்மைகளை மனிதன் இலகுவாக பெறும் வாய்ப்புண்டு எனக்கூறி, உணவை ஊட்டுவதற்குக்கூட எவ்வாறு எந்த முறையில், எப்போது உண்ண வேண்டுமெனவும் அறியத்தந்துள்ளனர். சகமனிதனை மகேஸ்வரனாகவே மதித்தல் அவசியமென வலியுறுத்திய ரிஷிவம்சம், மனிதனது ஆன்மாவை மகேஸ்வரனாகக் கருதி, அந்த ஆத்மாவிற்கு நிவேதிக்கும் பூசையையே மகேஸ்வரபூசையெனக்கூறினர். இம்மகேஸ்வர பூசை வழமை இக்கலியுகத்திலும் நடைபெறுகிறதெனில் எம்முன்னோர் செய்த தவப்பயனேயெனலாம்.

உணவுவகைகள் எவ்வாறு அமையவேண்டுமெனவும் தரவுகளுண்டு

உயிர்கொண்டு வாழவும், அவ்வுயிருக்குத் தரும் பூசனையும், அப்பூசனையால்பெறும் பாக்கியமும்தான் மனிதனை நல்வழியில் இட்டுச்செல்லும்.

தமிழ் மூதாட்டியார் ஔவையார்கூட சங்கத்தமிழ்தான் மனிதவாழ்வை உயர்வுகொண்ட தெய்வீகயம்சமாக அமைக்கும் என்பதனையுணர்ந்து நல்வழிநூலில் கடவுள்வாழ்த்து செய்யுள் மூலம் விக்னேஸ்வரருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரபூசையாக பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் இவை நாலும் கலந்து நிவேதித்து, அதற்குக் கைமாறாக சங்கத்தமிழ் மூன்றும் தா - என இரந்திருக்கின்றார்.

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும்தா."

சங்ககால மாந்தர்கள் தெய்வச் சாயலாகவே வாழ்ந்தார்கள். அவ்வாறு வாழ அவர்கட்கு அக்கால உணவுவகைகள் தான் உயிரூட்டியது. ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது அவர்களறியாமலேயே கைகூப்பி வணங்கிநிற்றலை யாம் காண்கின்றோம். இது ஒருவனை மற்றவர் மகேசனாகவே கருதி வணக்கஞ் செய்வதாகிறது. வேற்றுமைகளேதுமின்றி, சகோர வாஞ்சையோடு உலகுய்ய உதவுகிறது மனித நேயங்களோடு கூடிய மகேஸ்வர பூசை.

கண்ணபிரானைத் தரிசிக்க வேண்டுமெனப் புறப்பட்ட குசேலர், அவரது மனைவியிடம் "அன்புமிக்கவளே! தெய்வம், ஆசிரியர், அரசன், குரு இவர்கள் முன் போகும்போது ஏதாவதொரு உணவுவகையையும் எடுத்துச் செல்வதுதான் தர்மம். எனவே கண்ணபிரானை தரிசிக்கப்போகும் நான் கையுறையாக எதனைத்தான் கொண்டுசெல்வேன். கடுகத்தனை சிறிய கற்பூரதீபம் செய்யின் அது கருணை பெறுதல் போலவும், தம் சிற்றாடையின்கண் உள்ள ஓர் சிறு நூலிழையைப் பிரித்து அர்ச்சித்து கன்னிப் பெண்கள் தங்கட்கு உயரிய கணவனை தருமாறு சந்திரனிடம் வேண்டிக்கொள்வது போலவும், நானும் ஏதாவதோர் உணவுப் பொருளை எம் வசதிக்குத் தகுந்தாற்போல் கொடுக்கவேண்டுமல்லவா, அதற்கேதுவழி எனக் கேட்டார். கற்பின் சின்னமான சுசீலை இறைவனை நினைந்தாள். தான் உபவாசமாக இருந்து சிறிது சிறிதாகச் சேர்த்த நெற் தானியங்களைச் சேகரித்தாள். நெல் வயல்களில் முளைவிடாத நெற்தானியங்களையும் சேகரித்தாள். இவற்றை பதனிட்டு கிருஷ்ணனுக்கு நிவேதனமாக சுவையான அவலைத் தயாரித்து கிழிதற்கு இடமில்லாததோர் கந்தைத் துணியில் பக்குவமாக அவலை சிறுமூட்டையாகக் கட்டி துவாரகைக்கு சென்றுவருவீர்களாக என பயணத்தைத் தொடக்கி வைத்தாள் சுசீலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவோ நாட்களாக பல தூரம் நடந்து களைத்துப்போன குசேலர் அவல்முடிச்சோடு பல கஷ்டங்களின் பின் கண்ணபிரானைக் கண்டதும், கண்ணபிரான் குசேலரை ஆரத்தழுவி

*"பாக்கியம் பெற்றதிந்நாள் பாக்கியம் பெற்றதிந்நாள்*
*ஆக்கிய அறம் பலித்தது: ஆக்கிய அறம் பலித்தது*
*யோக்கியம் அடைந்தது இந்த மனையும்"*

என்று கூறி மகிழ்ச்சியில் திகழ்ந்தார். குசேலருக்கு தன் கைகளாலேயே நீராட்டி, உடைசாத்தி, மாலைசூட்டி உரையாடும்போது உன்மனைவி சுசிலை எனக்குத் தருவதற்கு ஏதும் நிவேதனம் தந்திருப்பாளே அதைத் தருக என்றார். குசேலர் கந்தையில் கட்டிய அவலை எவ்வாறு கொடுப்பதென சிந்தித்தபோது கண்ணபிரானே கந்தையை அவிழ்த்து அவலை கண்டார். ஓர்பிடி அவலை வாயிலிட்டு, குசேலரது வறுமை நீங்கவும் குசேலரது அவந்தி நகரம் சிறப்போடு விளங்கவும் அருள்பாலித்தார்.

ஓர் சிறங்கை நிவேதனம் இவ்வாறு அருள் கொடுத்தது. இறைவனுக்கு வழங்கிய அவல் நிவேதனம் இறையுணர்வோடு இறைபக்தி கொண்ட மானிடனால் மிகுந்த விருப்போடு தரப்பட்டதைக் கவனிக்க வேண்டும்.

பசியென்பது உடலோடு மனதையும் வாட்டும். சிந்தனைகளை மறைக்கும், அதுவுமோர் நோயேதான். பசி ஏழைகள் செல்வந்தர் என்பதனைப் பார்ப்பதில்லை. உயிர்கொண்ட அத்தனையும் பசிப்பிணியால் வாடியேதீரும். உலகில் பசிப்பிணியை தீர்க்கவேண்டுமென தீவிரமாக இறைவனை நினைத்த மணிமேகலை, வைகாசி பௌர்ணமியன்று கோமுகி என்ற குளத்திலிருந்து "அமுத சுரபி" என்னும் அட்சய பாத்திரத்தை தவப்பயனால் பெற்றுக் கொண்டாள். அமுதசுரபியில் என்றுமே வற்றாது உணவு பொங்கிவரும். இப்பாத்திரம் மூலம் வளரும் சோற்றினைக்கொண்டு உயிர்களது பசியைப் போக்கி அவர்களது இறையுணர்வை வளர்ப்பேன் என உறுதிபூண்டாள் மணிமேகலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப்பெரும்புணை விடூஉம்
நாண் அணிகளையும் மாண்எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரோடு புறங்கடைநிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி அது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என் நா நிமிராது"

என மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் அறியத்தருகிறார்.

அமுதசுரபியைப் பெற உதவிய தீவதிலகை மணிமேகலையை அணைத்து "அற உணர்வு பெற்ற அன்னாய், பசிநோய் இறைவனை நினைத்தாலும் தினமும் உயிர்கொண்ட உடலிடம் வந்துகூடும்" இந்நோய் ஏற்படின் முனிவர்கள்கூட அறிவு மயங்கப் பெறுவர். ஓர்முறை விஸ்வாமித்திரர்கூட பசியால் வருந்தி வாடியபோது இந்திரனே மழையை உண்டாக்கி தாகம், பசி தீர உதவிய வரலாறு உண்டு. உலகில்வாழ்பவர்கட்கு பசியால் வாடி வருந்துபவர்கட்கு பசிக்குணவு கொடுத்து உயிரைக் கொடுத்தோர் ஆவர் என்றாள், இதனைச் சாத்தனார்

"ஆற்றுநர்க் (கு) அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்(கு) எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

- என்றார்

பிறப்பு, மூப்பு, நோய், இறப்பு எனும் துன்பங்களை உடையது உடம்பு, அது நிலையற்றது, ஆனால் அறம் என்றும் நிலைபெற்றுனிற்கும். மகேஸ்வரபூசை ஈஸ்வரனது பூசையாகிறது. இந்த ஈஸ்வரன் குருடு, செவிடு, கூன், ஏழை எளியவர்கள் என்றெல்லாம் பார்ப்பதில்லை. இவர்களது இதயக் கமலத்திலமர்ந்து "புருஷன்" என்ற நிலையில் உலகில் நடைபெறுவதையும் அவதானிக்கிறது. இவர்களிடம் கூடும் பசிப்பிணியால் உடலை வாட்டிவதைக்கும் இவர்கட்கு யார் யார் அறம் செய்கிறார்கள் என்பதைக்கூட ஆத்மலிங்கம் ஊன்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனித்தவண்ணம் நோக்குகின்றது. முற்பிறப்பின் செய்வினைகளது சார்பாக மனிதன் இப்போ ஏது செய்கின்றான் என்பதனையும் ஆத்மலிங்கம் அவதானிக்கிறது. உடலும், உயிரும், வெவ்வேறானவை. உடலிலிருந்து உயிர் எங்கே செல்கிறதென்பதை தர்மசாஸ்திர நூல்கள் அறியத்தருகின்றன. தர்மங்களையும் அறம்சார்ந்த நல்வினைகளையும், இறையுணர்வோடு ஆற்றும் கர்மாக்களையும் செய்தவர்களது உயிர் தம்மிடமே சேர்கிறதென இறைவனது வாக்கு. நல்வினைகளுள் மஹேஸ்வர பூசைகளும் முதன்மை பெறுகின்றன. மஹேஸ்வர பூசைக்கு உறுதுணைபுரிவோர், வளர்ப்போர், அதில் பங்கு கொண்டு பணியாற்றுவோர், உந்து சக்தியாக உதவுவோர் அனைவருக்கும் இறைவனது திருவருள் இயல்பாகவே தடங்கல் ஏதுமில்லாது அமைகிறது. மஹேஸ்வர பூசையில் அன்னமருந்துவோர்கூட சாயுஜ்ய பதவிகளைப் பெறுவாரென காஸ்யபரிஷி அறியத்தந்துள்ளார். அன்னமோ அல்லது ஏதாவதோர் உணவையோ ஈஸ்வரபூசையாக நிவேதனமாக ஏற்றவர்களது மலரும் வதனங்களின் திருஷ்டியால் பாபவிமோசனம்கூட நிகழுமென அறநூல்கள் தரவுகள் தருகின்றன. மஹேஸ்வரபூசை, ஆலயங்கள், மடாலயங்கள், இல்லங்களில் இடம்பெறும் சுபகார்ய நிகழ்வுகள், தீர்த்தக்கரை, மற்றும் அரசசபை போன்ற இடங்களிலும் நிகழ்த்தலாம். நிறைந்த புனிதத்தன்மையும், விதிமுறைகளிற் கூறப்படும் பதார்த்தங்களையும் பருவகாலங்களுக்கேற்றதான தானியங்களையும், காலை, நண்பகல், மாலை, இரவு என்னும் காலகாலங்களிலும் ஈஸ்வரபூசையை முன்னெடுக்கலாம். எனினும் உச்சிக்கால மஹேஸ்வரபூசைகள்தான் நூறுவீதமான பலனைத் தந்துநிற்குமெனத் தெரியவருகிறது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் தெற்கு வீதியோரமாக அமைந்திருக்கும் " ஸௌஜன்யா மண்டபத்தில் " உற்சவ காலங்களிலும், பிரதி வெள்ளிக் கிழமைகளிலும் தினமும் வருகை தரும் பக்தர்கட்கு அன்னதானம், தாகசாந்தி நிகழ இறைவன் திருவருளும் இணைந்து நிற்கிறது.

இவ்வாறு வியய வருஷம் இடம்பெற்ற அன்னதான நிகழ்வுகளிற்கு உதவிய சிவோத்தமர்களது விபரங்களை அறியத்தருவதில் யாம் எமது பணியையும் ஆற்றுகின்றோம். இவர்கட்கெல்லாம் மாவைக் கந்தனது திருவருளும் இணையவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் திடீர் நிகழ்வுகளின் தாக்கங்களால் அல்லற்பட்டு அழுது ஆற்றாது எம்மிடம் அணுகிய மாந்தர்கட்கு எம்மால் இயன்ற உணவுப்பதார்த்தங்களையும், உணவுகளையும் வழங்கவேண்டிய அவசியமும் இம்முறை ஏற்பட்டது ஓர் சோதனையே. இவை தொடர்ந்தும் இடம்பெறுகிறது.

இவ்வருட மஹேஸ்வர பூசையில் பக்தர்கள் தாமாகவே முன்வந்து உணவுப்பதார்த்தங்களை தந்துதவி தத்தமது மூதாதையர் தம்மைவிட்டுப் பிரிந்தோரது ஞாபகார்த்தமாக அவர்களது ஆத்மசாந்தியின் பொருட்டு அன்னதான நிகழ்வுகளை ஏற்றனர். பலர்கூட நின்று பல உதவிகளை தொண்டர்களோடு இணைந்து ஆற்றினர். இவர்கட்கெல்லாம் எமது சபையினர் என்றும் நன்றியுடையவர்களாக விளங்குவர். இப்பணி மீண்டும் மீண்டும் வளர வேண்டுமென்பது அவசியமுமாகிறது. இதற்காகவும் யாம் மாவைக் கந்தனை நினைத்துப் பிரார்த்திக்கின்றோம்.

சர்வஜித் வருஷம் மஹேஸ்வர பூசை தொடர்ந்தும் வெகு உற்சாகமாக முன்னெடுக்க சிவபக்தர்கள் தத்தம் இயல்புக்கேற்ற பேராதரவுகளை வழங்கி இச்சிவ புண்ணியதர்மசேவைகட்காளாகி மாவைக் கந்தனது திருவருளுக்காளாகுமாறும் வேண்டுகின்றோம்.

சி. கணேசலிங்கம்

பொறுப்பாளர்

மாவைக் கந்தன் மஹேஸ்வரபூசைத் தொண்டர் சபை

## பணியாளர்கள்

அ. ஆனந்தசிங்கம்

வ. இரத்தினம்

க. சிவலிங்கம்

பெ. லம்போதரன்

இ. சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2006ம் ஆண்டு விய வருஷ அன்னதான தர்மங்கட்கு நிதியுதவி தந்தோர் விபரம்

| பெயர் | முகவரி | ப. சீட்டு இல. | தொகை |
|---|---|---|---|
| பராசக்தி பரமேஸ்வரன் | அவுஸ்திரேலியா | 377 | 1000.00 |
| சிவகுருநாதன் குடும்பம் | மாவிட்டபுரம் | 378 | 300.00 |
| Dr. V. புவனேந்திரன் குடும்பம் | கொல்லன்கலட்டி | 379 | 2000.00 |
| கனகரட்ணம் கதிர்காமத்தம்பி | நல்லூர் | 380 | 2000.00 |
| செ. உஷாதேவி | மாவிட்டபுரம் | 381 | 1000.00 |
| ஞானசரஸ்வதி சின்னத்தம்பி | கே. கே. எஸ். | 382 | 1000.00 |
| சி.மு. சின்னத்தம்பி | உடுவில் | 383 | 500.00 |
| து. ஜெயக்குமார் குடும்பம் | தெல்லிப்பழை | 384 | 5000.00 |
| ச. அம்பலவாணர் | சண்டிலிப்பாய் | 385 | 1000.00 |
| திலகவதி கந்தசுவாமி | கொல்லன்கலட்டி | 386 | 1000.00 |
| திருமதி. க. பாஸ்கரன் | மல்லாகம் | 387 | 1000.00 |
| R. பரதராஜ் | U. S. A | 388 | 1000.00 |
| செ. ஸ்கந்தவரோதயன் | புன்னாலைக்கட்டுவன் | 389 | 100.00 |
| ஜீவரத்தினம் சிவசெல்வச்சந்திரம் | மாவிட்டபுரம் | 390 | 1000.00 |
| பொன்னம்பலம் சிவசோதிலிங்கம் | மாவிட்டபுரம் | 391 | 500.00 |
| திரு. ஞானசேகரம்பிள்ளை | மாவிட்டபுரம் | 392 | 1000.00 |
| திருமதி. சின்னத்துரை | கொல்லன்கலட்டி | 393 | 500.00 |
| சீனி முருகையா | சுன்னாகம் | 394 | 1000.00 |
| திருமதி த. கிருபாகரன் | கைதடி | 395 | 200.00 |
| சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் | மாவிட்டபுரம் | 396 | 1000.00 |
| கந்தையா உமாசுதன் | சுன்னாகம் | 397 | 1000.00 |
| திருமதி செல்வம் நடராசா | U. K | 398 | 1000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| திரு. சதாசிவம் குடும்பம் | வீமன்காமம் | 399 | 4000.00 |
| யா/நடேஸ்வராக் கல்லூரி | K. K. S. | 400 | 1000.00 |
| கலாதேவி பொன்னம்பலம் | தெல்லிப்பழை | 401 | 1000.00 |
| பாலசுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை | மாவிட்டபுரம் | 402 | 400.00 |
| சற்குணசிங்கம் சயந்தன் | மாவிட்டபுரம் | 403 | 1000.00 |
| திருமதி. மா. கனகசபை குடும்பம் | மாவிட்டபுரம் | 404 | 1004.00 |
| ச. சண்முகநாதன் | மாவிட்டபுரம் | 405 | 5000.00 |
| யா/யூனியன் கல்லூரி | தெல்லிப்பழை | 406 | 1000.00 |
| திருமதி. பூதப்பிள்ளை நினைவாக | கொல்லங்கலட்டி | 407 | 1000.00 |
| திருமதி. கோப்பெருந்தேவி நினைவாக | கொல்லங்கலட்டி | 408 | 1000.00 |
| வே. சம்பந்தப்பிள்ளை | K.K.S (கொழும்பு) | 409 | 1000.00 |
| இ. பெரியதம்பி கந்தையா சகோதரர்கள் | மாவிட்டபுரம் | 410 | 500.00 |
| V. துரைராசா | தெல்லிப்பழை | 411 | 1000.00 |
| Dr. K. ஷண்முகநாதன் | கொழும்பு | 412 | 1000.00 |
| திருவாளர் நவநீதராஜா | மாவிட்டபுரம் | 413 | 2000.00 |
| தி. ஆறுமுகம் சகோதரார்கள் | சித்தன்கேணி | 414 | 1000.00 |
| ஆறுமுகநாதன் ஜனார்த்தனன் | தெல்லிப்பழை | 415 | 6000.00 |
| சுப்பிரமணியம் சோதிலிங்கம் | கொல்லன்கலட்டி | 416 | 5000.00 |
| சு. சண்முகலிங்கம் | கொல்லன்கலட்டி | 417 | 1000.00 |
| வே. பாலகிருஷ்ணன் குடும்பம் | மாவிட்டபுரம் | 418 | 1000.00 |
| க. இராமச்சந்திரன் | மயிலிட்டி | 419 | 1000.00 |
| தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் | தெல்லிப்பழை | 420 | 1000.00 |
| யா/வீமன்காமம் மகாவித்தியாலயம் | மாவிட்டபுரம் | 421 | 500.00 |
| செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் | தெல்லிப்பழை | 422 | 15000.00 |
| அ. விஸ்வநாதன் | அளவெட்டி | 423 | 500.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| க. துரைசிங்கம் | சுழிபுரம் | 424 | 1000.00 |
| சு. குமாரசிங்கம் | மல்லாகம் | 425 | 1000.00 |
| சோ. கந்தசாமி | உடுவில் | 426 | 2000.00 |
| ம. பேரானந்தமூர்த்தி | மல்லாகம் | 427 | 500.00 |
| சி. சீவரத்தினம் | மல்லாகம் | 428 | 1000.00 |
| ந. அற்புதராசா | கோண்டாவில் | 429 | 1000.00 |
| அம்பலவாணர் ராமச்சந்திரன் | கோண்டாவில் | 430 | 1000.00 |
| க. கருணாகரன் | இளவாலை | 431 | 1000.00 |
| வ. பாலச்சந்திரன் | தெல்லிப்பழை | 432 | 3000.00 |
| மாவைக் கந்தன் சிக்கன கடனுதவு கூ. ச. | மாவிட்டபுரம் | 433 | 1000.00 |
| மாவை மத்திய சனசமூக நிலையம் | மாவிட்டபுரம் | 434 | 500.00 |
| கு. கிருபாகரன் குடும்பம் | குப்பிளான் | 435 | 200.00 |
| குகனேசன் கேதீசன் | கொல்லன்கலட்டி | 436 | 1000.00 |
| திரு. திருமதி மகேந்திரம் குடும்பம் | வீமன்காமம் | 437 | 10100.00 |
| இராஜபவானி நடராஜலிங்கம் | மாவிட்டபுரம் | 438 | 2000.00 |
| க. சிவனேசன் | மாவிட்டபுரம் | 439 | 2000.00 |
| S. இராசரட்ணம் | கொழும்பு | 440 | 1000.00 |
| க. இராஜலச்சுமி | கொல்லன்கலட்டி | 441 | 1000.00 |
| Dr. மகேசன் குடும்பம் | உடுவில் | 442 | 500.00 |
| நவரட்ணம் பாலமுரளி | கொல்லன்கலட்டி | 443 | 500.00 |
| மூ. பாலசிங்கம் | சுன்னாகம் | 444 | 200.00 |
| ச. திருநாவுக்கரசு | பன்னாலை | 445 | 1000.00 |
| கார்த்திகை உபயகாரர்சபை | K. K. S. | 446 | 5000.00 |
| திருமதி. க. குணலிங்கம் | குப்பிளான் ஏழாலை | 447 | 500.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| மு. ஸ்ரீஸ்கந்தராசா | பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 448 | 500.00 |
| க. சுப்பிரமணியம் குடும்பம் | மயிலிட்டி | 449 | 2000.00 |
| ஆறுமுகம் தர்மலிங்கம் | வவுனியா | 450 | 1000.00 |
| பெ. லம்போதரன் | கொல்லன்கலட்டி | 451 | 2000.00 |
| உலகநாதன் கிருஷாந்தன் | தெல்லிப்பழை | 452 | 500.00 |
| ச. மருதாசலம் | தெல்லிப்பழை | 453 | 1000.00 |
| க. கணேசலிங்கம் | ஆனைக்கோட்டை | 454 | 1000.00 |
| த. சிவபாதசுப்பிரமணியம் | சுன்னாகம் | 455 | 2000.00 |
| திரு. திருமதி. காராளசிங்கம் | மாவிட்டபுரம் | 456 | 1500.00 |
| திரு. திருமதி. மகாலிங்கம் குடும்பம் | கீரிமலை | 458 | 1000.00 |
| பொன்னுச்சாமி சத்தியநாதன் | அளவெட்டி | 459 | 1000.00 |
| உதயவருணன் சுவர்க்கவதி | மயிலிட்டி | 460 | 300.00 |
| சரவணமுத்து கனகேஸ்வரி ராஜ்குமார் | கொல்லன்கலட்டி | 461 | 10000.00 |
| ச. ஜெயரட்ணம் | யாழ்ப்பாணம் | 462 | 500.00 |
| ம. நாகேஸ்வரி | கொல்லன்கலட்டி | 463 | 200.00 |
| நா. சங்கரப்பிள்ளை | U. K. | 464 | 1500.00 |
| நா. சரவணமுத்து | உடுவில் | 465 | 1000.00 |
| S. I. விஜியநாயகம் | தெல்லிப்பழை | 466 | 5000.00 |
| முருகன் அன்பர் | கொழும்பு | 467 | 1000.00 |
| திருமதி தனம் சரவணபவாநந்தன் | கொழும்பு | 468 | 5000.00 |
| நடராஜா நந்தினி | தெல்லிப்பழை | 469 | 500.00 |
| திருமதி. ம. செல்லையா | கொழும்பு | 470 | 1000.00 |
| திருமதி. பூர்ணானந்தா | கொழும்பு | 471 | 1000.00 |
| சுப்பிரமணியம் முருகையா | தெல்லிப்பழை | 472 | 500.00 |
| திருமதி குணா சிவபாலன் | பண்ணாகம் | 473 | 501.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| செல்லப்பா குமாரசாமி | இளவாலை | 474 | 1000.00 |
| திருமதி. சிவபஞ்சாயுதன் | சுன்னாகம் | 475 | 505.00 |
| சி. கார்த்திகைக்குமரன் | உடுவில் | 476 | 1000.00 |
| அ. பரமநாதன் | தெல்லிப்பழை | 477 | 200.00 |
| ரேகா சிவசுப்பிரமணியம் | கட்டுவன் | 478 | 1000.00 |
| S. சந்திரலிங்கம் | மானிப்பாய் | 479 | 1000.00 |
| திருமதி. கிருபாகரன் | கைதடி தெற்கு | 480 | 1000.00 |
| நடராசா சிவகுமார் | வீமன்காமம் | 481 | 500.00 |
| த. லதாகுமாரி | கொக்குவில் | 482 | 100.00 |
| ட. கீதாகுமாரி | லண்டன் | 483 | 100.00 |
| கு. ஸ்ரீகரன் | மல்லாகம் | 484 | 1000.00 |
| திருமதி. பாலகௌரி திருவேந்திரம் | கொழும்பு | 485 | 10000.00 |
| திருமதி. ரகு குடும்பம் | மாவிட்டபுரம் | 486 | 1000.00 |
| அகிலேஸ்வரக் குருக்கள் குடும்பம் | தெல்லிப்பழை | 487 | 1000.00 |
| S. சுப்பிரமணியம் குடும்பம் | உடுவில் | 488 | 200.00 |
| க. சிவபாலன் | தெல்லிப்பழை | 489 | 500.00 |
| சிவகுமார் (பிள்ளையார்) | சண்டிலிப்பாய் | 490 | 500.00 |
| கந்தசாமி அப்புத்துரை குடும்பம் | மாவிட்டபுரம் | 491 | 1000.00 |
| Dr. மகேசன் குடும்பம் | உடுவில் | 492 | 300.00 |
| இ. ஐங்கரன் | சுன்னாகம் | 493 | 500.00 |
| சிவக்கொழுந்து கமலாதேவி | மாவிட்டபுரம் | 494 | 500.00 |
| சி. அசோக்குமார் | புன்னாலைக்கட்டுவன் | 495 | 1000.00 |
| கு. கோகுலவாசன் | கொல்லன்கலட்டி | 496 | 1000.00 |
| திருமதி. கலா சிவலிங்கம் | வவுனியா | 497 | 1001.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| குணராஜசிங்கம் | மல்லாகம் | 498 | 1000.00 |
| V. முரளி | ஆனைக்கோட்டை | 499 | 200.00 |
| முதலித்தம்பி ஜெயரூபன் | கொல்லன்கலட்டி | 500 | 300.00 |
| பராசக்தி பரமேஸ்வரன் | அவுஸ்திரேலியா | 501 | 1000.00 |
| விஜயசிங்கம் சிவசுப்பிரமணியம் | மாவிட்டபுரம் | 502 | 500.00 |
| திரு. சோமசுந்தரம் | கொல்லன்கலட்டி | 503 | 1500.00 |
| M. சபாநாதன் | மல்லாகம் | 504 | 1000.00 |
| திரு. கணேசன் | வசாவிளான் | 505 | 3000.00 |
| வாமதேவன் குமுதினி | U. S. A. | 506 | 2000.00 |
| திருமதி சங்கரப்பிள்ளை குடும்பம் | துன்னாலை | 507 | 2000.00 |
| பவானி இராஜசிங்கம் | U. K. | 508 | 2000.00 |
| ஆ. தெய்வேந்திரம் | செங்கலடி | 509 | 100.00 |
| திருமதி. சரஸ்வதி ஆறுமுகராசா | மாவிட்டபுரம் | 510 | 3000.00 |
| திரு. ஈஸ்பரதாசன் | கொழும்பு | 511 | 1500.00 |
| திருமதி. பழனியாண்டி | கொழும்பு | 512 | 4000.00 |
| கி. ஷண்முகராசா | கொல்லன்கலட்டி (கனடா) | 513 | 6000.00 |
| வ. சோமசுந்தரம் | கொல்லன்கலட்டி (கொழும்பு) | 514 | 5000.00 |
| திருமதி. வனஜா ராகவன் | உடுவில் கிழக்கு | 515 | 1000.00 |
| கோபாலகிருஷ்ணன் | தெல்லிப்பழை | 516 | 500.00 |
| DR. தீனதயாளன் | உடுவில் | 517 | 400.00 |
| திரு. சுந்தரமூர்த்தி ஆசிரியர் | தெல்லிப்பழை | 518 | 2000.00 |
| தா. நிரந்திரி | மாவிட்டபுரம் | 519 | 300.00 |
| செ. ஞானசேகரம்பிள்ளை | மாவிட்டபுரம் | 520 | 1000.00 |
| பராசக்தி பரமேஸ்வரன் | அவுஸ்திரேலியா | 521 | 1500.00 |
| மொத்தம் | | | 224211.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் 2006ம் ஆண்டு விய வருஷ அன்னதான தர்மங்கட்கு பொருட்கள் தந்தோர் விபரம்

1. அ. ஆனந்தசிங்கம்கொல்லன்கலட்டி
2. வி. ஹரிகரன் — கொல்லன்கலட்டி (பிரான்ஸ்)
3. க. சிவசோதிலிங்கம் — கொல்லன்கலட்டி
4. சுந்தர் ராஜன் — சுன்னாகம்
5. விஜயபாலா — மல்லாகம்
6. ச. கணேசன் குடும்பம் — வசாவிளான்
7. ஆறுமுகம் மயில்வாகனம் — இணுவில்
8. ஆ. ஜெனார்த்தனன் — தெல்லிப்பழை
9. சி. சேனாதிராஜா — மாவிட்டபுரம்
10. க. பிரதீபன் — கொல்லன்கலட்டி
11. சி. சிவலிங்கம் — தெல்லிப்பழை
12. ஏழாலை வடக்குவாழ் மக்கள் வடக்கு கிழக்கு சனசமூக நிலையம் ஏழாலை (இ. ஞானரஞ்சன் ஊடாகத் தரப்பட்டது)
13. சபாபதி — மயிலிட்டி
14. கிளி — ஏழாலை
15. க. துரைசிங்கம் — கொல்லன்கலட்டி
16. தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. சமாசம் தெல்லிப்பழை
17. சி. பாலசுப்பிரமணியம் — விழிசிட்டி
18. சி. கணேசலிங்கம் — கொல்லன்கலட்டி
19. வே. விஸ்வராஜா — தெல்லிப்பழை
20. இ. மனோகரன் — கொல்லன்கலட்டி
21. சிவபாதசுந்தரம் (பச்சை) — சுன்னாகம்
22. கு. ஸ்ரீதரன் — மல்லாகம்
23. க.சிவபாதசுந்தரம் — தெல்லிப்பழை
24. மகாஜனாக் கல்லூரி — தெல்லிப்பழை
25. க. நன்னித்தம்பி — சுன்னாகம்
26. மாணிக்கப்பிள்ளையார் குடும்பம் — அளவெட்டி
27. குகதேவன் — கொல்லன்கலட்டி
28. பொ. சத்தியநாதன் குடும்பம் — மாவிட்டபுரம்
29. சி. சிவராஜசிங்கம் — மயிலிட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 30. செ. ஜெயக்குமார் | மயிலிட்டி |
| 31. 515 B. D. E | காங்கேசன்துறை |
| 32. பொலிஸ் பிரிவினர் | காங்கேசன்துறை |
| 33. குருதேவன் | வீமன்காமம் |
| 34. வே. மகேஸவரன் | மாவிட்டபுரம் |
| 35. ஆ. கதிரமலை | மாவிட்டபுரம் |
| 36. சி. மகேஸ்வரன் | சாயுடை, மாவிட்டபுரம் |
| 37. மு. சபாரத்தினம் | மயிலிட்டி |
| 38. தி. செந்தூரன் | இணுவில் |
| 39. சி. இந்திராதேவி | கொல்லன்கலட்டி |
| 40. ஷ. இரத்தினசபாபதி சிவாச்சாரியார் | மாவிட்டபுரம் |
| 41. மருதனார்மடம் சந்தை மரக்கறி விற்பனையாளர் | |
| 42. வ. இரத்தினம் | தெல்லிப்பழை |
| 43. திரு. அருந்தவராசா | தையிட்டி |

## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் 2006ம் ஆண்டு விய வருஷ அன்னதான தர்மங்கட்கு உபகரணங்கள் அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | அ. ஆனந்தசிங்கம் | 2 பிளாஸ்ரிக் ஜொக் |
| | | 4 எவர்சில்வர் தட்டு |
| 2. | கி. சிவசோதிலிங்கம் | 7 பாய் |
| | | 7 அகப்பை |
| | | 2 நீத்துப்பெட்டி |
| 3. | சி. சிவலிங்கம் | 1 செம்பு |
| | | 2 கைபிடி ஜொக் |
| 4. | வ. குணரட்ணம் | 5 தும்புத்தடி |
| 5. | குருதேவன் | 3 பேசின் |
| | | 1 டசின் டம்ளர் |
| | | 4 கத்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவுசெலவுகள் விபரங்கள்
## (01-06-2006 - 30-04-2007)

| | விபரம் | வரவுகள் |
|---|---|---|
| 1. | ஆரம்பகையிருப்பு - நிதி | 19324.00 |
| 2. | 01-06-2006 - 30-04-2007 நிதி வரவு | 224211.00 |
| 3. | உணவுப் பொருட்களாக பக்தர்கள் தந்தவை | |
| | 1. பலசரக்கு பெறுமதி அரிசி உட்பட | 120052.50 |
| | 2. காய்பிஞ்சு தேங்காய் கிழங்குவகை என்பன | 27850.00 |
| 4. | பாதுகாக்க இயலாத சூழ்நிலையில் விற்ற | |
| | உணவுப் பதார்த்தங்கள்(1313K) வருமதி | 39390.00 |
| 5. | தர்ம உண்டியல் சேமிப்பு | 2100.00 |
| | ஆக மொத்த வரவு | 432927.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விபரம் | செலவுகள் |
|---|---|
| 1. பக்தர்கள் வழங்கிய பதார்த்தங்கள் உபயோகம் | 147902.00 |
| 2. விலை கொடுத்துப் பெற்ற பதார்த்தங்கள் பெறுமதி | |
| 1. சந்தைப் பொருட்கள் | 22760.00 |
| 2. பலசரக்கு வகை | |
| பாரத் களஞ்சியம் 26129.00 | |
| பாலன் ஸ்ரோர்ஸ் 1816.00 | |
| தெ. ப. நோ. கூ. ச 457.00 | 28402.00 |
| 3. போக்குவரத்து பிரயாணம் | 1000.00 |
| 4. விறகு கொத்துக் கூலி | 12500.00 |
| 5. ஊழியர் சன்மானம் | 5000.00 |
| 6. பிரத்தியேக சிரமதான சேவகர்கள் தானதர்மம் | 7100.00 |
| 7. தினசரி அன்னதானச் செலவுகள் | 67300.00 |
| 8. விஷேட மாத, வார, உற்சவதின அன்னதானசெலவு | 80155.00 |
| 9. அச்சுக் கூலி | 16500.00 |
| 10. அல்லற்பட்டு ஆதரவுவேண்டி வந்தோர்க்கு | |
| நிவாரணம் கொடுத்தது | 11075.00 |
| 11. பலபொருட் சேதாரங்கள் | 900.00 |
| மொத்தம் | 400594.00 |
| கையிருப்பு | 32333.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பணி விஞ்ஞாபனம்

இப்பூமியில் பிறந்தது அறம் வளர்த்தலே தம் அரும்பெரும் தொண்டென்ற இலட்சியங்களோடு வாழ்ந்த சைவச் சான்றோர்களின் வாரிசுகளாக பரம்பரையாக வாழ்ந்து வரும் உத்தம சீலர்களே!

மாவைக் கந்தப் பெருமானது திருக்கோவிலின் திருப்பணிகளுக்கு உங்களது திருக்கரங்களால் உதவி தந்து விரைவில் இத்திருப்பணிகள் நிறைவேற தங்களாலியன்ற உதவிகளை தந்துதவுமாறு இரந்து நிற்கின்றோம்.

முரிந்து வீந்தன உடைந்தன முதலிய
நெரிந்த வாசிய கோபுர நெடுமதலி பிறவும்
தெரிந்து முனையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்துளோர் பெறும் புண்ணிய நான் மடங்குறுவார்.

(காஞ்சிப்புராணம்)

முருகப் பெருமானை நினைந்து பூரண மகிழ்வுடன் உதவுக

-திருப்பணிச் சபையினர்

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பை
கூறுசெய்தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க
செவ்வேள் ஏறியமஞ்சை வாழ்க
யானை தனனாங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ் சீரடியார் ரெல்லாம்

T. P. 021 2225799



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

# திருப்புகழ்

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரு முறுகேளும்

இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்

விரிந்த நாடுங் குன்றமு நிலையென மகிழாதே

விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே

குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே

குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா

திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே

சிவந்த காலுந் தண்டை மழகிய பெருமாளே

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்

இலங்கு நூலும் புலியுத னாடையு மழுமானும்

அசைந்த தோடும் சிரமணி மாலையு முடிமீதே

அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா

உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே

உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே

அசைந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்

அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செல்வி அச்சகம்
மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org